# இந்திய அமைச்சர் சுவர்ணசிங்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 220

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 203

சாந்திரமான ஆவணி 17 றஜப் 11 வெள்ளிக்கிழமை (3-9-71)

3 SEP 1971 UNDERGRADUATE LIBRARY

## இம்மாதம் 9-ம் திகதி இலங்கை வருகிறார்

புதுடில்லி, செப் 1
இந்திய வெளிநாட்டமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் இம்மாதம் 2-ம் வாரத்தில் இலங்கைக்கு வரவிருக்கிறார்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அழைப்பை ஏற்று இலங்கைவரும் திரு சுவர்ணசிங் இம்மாதம் 9-ம் திகதியிலிருந்து 12-ம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார். பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் இலங்கை இந்திய பிரச்னைகள், சர்வதேசப் பிரச்னைகள் பற்றி இவர் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

### எம்.பி.க்கு கார்

யாழ்ப்பாணம், வியாழன்
நியமன எம்.பி திரு எம். ஸி சுப்பிரமணியத்துக்கு புதிய கார் இம்மாதம் 12ம் திகதி வழங்கப்படும். யாழ்ப்பாணத்தில் இதற்கான அன்பளிப்பு விழா நடைபெறும். உதவி பாதுகாப்பு அமைச்சர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, யாழ் நகரமேயர் திரு அல்பிரட் துரையப்பா உட்பட மற்றும் பல பிரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

## 50 லட்சம் ரூபா பொருட்கள்

# இலங்கைக்கு சுவீடன் அன்பளிப்பு

கோட்டை, புதன்
இலங்கைக்கு சுவீடன் முதல்தடவையாக 50 லட்சம் ரூபாவுக்குமதிகமான மதிப்புள்ள பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இப்பொருட்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் வெளிநாட்டமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரிசித்தடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டை அடுத்தே இவ்வுதவியை சுவீடன் வழங்குகிறது.

இவ்வொப்பந்தத்தின்கீழ் 52 லட்சம் ரூபா பெறுமதியுள்ள பத்தாயிரம்தொன் பசளையை சுவீடன் இலங்கைக்கு வழங்குகிறது. இப்பொருட்கள் கடல்மார்க்கமாக இலங்கைக்கு அனுப்பப்படும். இலங்கை உரகூட்டுத்தாபனம் ஊடாக நெல் உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படும். இந்த உர விற்பனையினால் கிடைக்கும் பெறுமதி அரசினால் உருவாக்கப்படும் கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவிடப்படுமென்றும் தெரியவருகிறது.

‘சோஷலிஸ நாடுகளில்

## தொழிலாளரே அறிஞர்களை உருவாக்குகிறார்கள்’

யாழ்ப்பாணம், வியா
“மக்கள் அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தொழிலாளர் மத்தியில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியுள்ளது. தொழிலாளர் வருங்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். சோஷலிஸ நாடுகளில் விஞ்ஞானிகளையும், அறிஞர்களையும், அரசியல் தலைவர்களையும் உருவாக்குபவர்கள் தொழிலாளரே”

ஐக்கிய அச்சக ஊழியர் சங்கத்தின் ‘ஈழநாடு’ பத்திரிகை அச்சுத் தொழிலாளர் சங்க கிளையின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் தொழிற்சங்கத் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“ஈழநாடு” அச்சுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு மா. பாலசிங்கம் தலைமையில் ஈழநாடு காரியாலயத்தில் நடைபெற்றது.

திரு வைத்திலிங்கம் மேலும் தொடர்ந்து பேசியதாவது: “நமது நாட்டுத் தொழிலாளரின் பிள்ளைகள் உயர் கல்வி கற்க முடியாது கஷ்டப்படவேண்டிய நிலையிலுள்ளது. ஆனால் சோஷலிஸ நாடுகளில் தொழிலாளரின் பிள்ளைகள் விஞ்ஞானிகளாகவும் அறிஞர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அங்குள்ள தொழிலாளர் கல்வி கலாச்சாரம் போன்றவற்றிலும் தங்கள் ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்துகின்றனர். இங்குள்ள தொழிலாளர் தங்கள் தொழில் பிரச்னைகளோடு நின்றுவிடுகிறார்கள். இதனால் கல்வி அரசியல் அறிவைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

கூட்டுறவு முறையில் ஊழல்களை நீக்க தொழிலாளர்; விவசாயிகள் மத்தியில் தலைவர்கள் தோன்ற வேண்டும்”

“ஈழநாடு பொது முகாமையாளர் திரு. அ. சீனிவாசகம் பேசுகையில், பத்திரிகையின் வளர்ச்சிக்கு தொழிலாளரின் ஒத்துழைப்பு மிகவும் தேவையென்றும் எல்லாப் பிரச்னைகளையும் ஒத்துழைப்பின் மூலம் தீர்த்துவிடலாமென்றும் பத்திரிகை வளர வளர மேலும் பலருக்கு வேலை வழங்குவதுடன் சில கஷ்டங்களும் தீர்ந்து விடலாம்” என்றும் கூறினார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் திரு. எஸ் நடராசா திரு எஸ் விஜயானந்தன் ஆகியோரும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவின் போது தொடர்ந்தும் இவ்வருடமும் இதே நிர்வாகிகளே தொழிற் சங்கத்தை நடத்த வேண்டும்” என்னும் பிரேரணை ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி திரு செ பாக்கியநாதன் நன்றி கூறினார்.

### கைப்பற்றியது

கோட்டை, புதன்
அரசாங்க லிகிதர் சேவைச் சங்க இறையகத்திணைக்கள கிளையின் நிர்வாகபீடத்தை லங்கா சமசமாஜக்கட்சி கைப்பற்றியது. நேற்று கொழும்பில் இத்தெரிவு நடைபெற்றது. திரு. எஸ். புத்ததாசா (ல ச ச க) 71 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். காரியதரிசியாக திரு லோறன்ஸ் பெரேரா (ல ச ச க) 65 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார் நிர்வாகசபை அங்கத்தவர்கள் 21 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். பழைய தலைவர் திரு விக்கிரமா தோற்கடிக்கப்பட்டார்.

## மகாஜன சம்பதசுவீப் முடிவு

கண்டி, புதன்
கண்டியில் நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 29-வது மகாஜன சம்பத சுவீப் சீட்டிழுப்பு வருமாறு:-

1-வது பரிசு:-
23 P 000370
ரூபா 73,300

2-வது பரிசு:-
24 D 000971
ரூபா 73,300

3-வது பரிசு;-
29 T 000879
ரூபா 73,300

ரூபா 366-50 சதம் பெறும் 200 ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 20C000063 | 22 000319 |
| 09D 00287 | 14D00 554 |
| 24D00 694 | 11D000216 |
| 19D00 841 | 30D000070 |
| 14D000401 | 12D000398 |
| 23D000756 | 15D000441 |
| 25D000062 | |
| 10E000788 | 08E000880 |
| 12E000649 | 28E000029 |
| 26E000853 | 14E000587 |
| 27E000792 | 12E000623 |
| 23E00 670 | 26E000476 |
| 25E000861 | 24E000809 |
| 27E0 0517 | 21E000739 |
| 07F000879 | 02F000929 |
| 21F000600 | 11F000141 |
| 13F000808 | 21F000183 |
| 23F000456 | |

| | | | |
|---|---|---|---|
| 05A000402 | 09A000347 | 08G000910 | 02G000190 |
| 28A000495 | 19A000054 | 10G000729 | 04G000325 |
| 18A000411 | 23A000275 | 14G000255 | 27G000447 |
| 05B000438 | 11 000139 | 23G000269 | 22G000431 |
| 26B000872 | 11B000243 | 31G000817 | 29G000636 |
| 13B000208 | | 21G000436 | |
| 01C000834 | 07C000577 | 05H000468 | 08H000901 |
| 04C000768 | 07C000585 | 22H000790 | 23H000105 |
| 05C000954 | 14C000535 | 17H000065 | 25H000218 |
| | | 30H000042 | |

| | |
|---|---|
| 06J000001 | 10J000286 |
| 03J000697 | 09J000012 |
| 06J000979 | 05J000231 |

(5-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை கொலை வழக்கு

## ‘மேல்மாடியில் நகைக்கடை முதலாளி இறந்து கிடந்தார்’

### கடைவிற்பனையாளர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்
‘நகைக்கடை முதலாளி கொலை செய்யப்பட்டு விட்டதாக கடைக்கு முன் நின்றவர்கள் சொன்னார்கள். இன்ஸ்பெக்டர் என்னைக் கூட்டிக்கொண்டு கடைக்குள் போனேன் கண்ணாடி உடைந்திருந்தது. நகைகள் இருக்கவில்லை. அந்த சோகேஸில் 2 உருண்டை முடிச்சு தாலிக்கொடி 5 பவுண் முடிச்சு மின்னல் கொடி 4 இராத்தல் பட்டு சங்கிலி இருந்தன 3மேல் மாடிக்குப் போனேன். முதலாளி இறந்து கிடந்தார் நான் அதிர்ச்சியடைந்தேன்.

பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலை வழக்கில் சாட்சியமளித்த நகைக்கடை விற்பனையாளர் நாராயணசாமி கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதிபதி சர் ஒ எல் டி கிரெஸ்டர் முன்னிலையில் நேற்று மூன்றாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பருத்தித்துறையில் 68ம் ஆண்டு அக்டோபர் 1ம் திகதிக்கும் 68ம் ஆண்டு நவம்பர் 3ம் திகதிக்கும் இடையில் முகமது சுல்தான் மஹ்தீன் என்பவரைக் கொலை செய்ய சபாரத்தினம் ராமச்சந்திரன், செல்லத்துரை நடராசா ஆகிய இருவரும் ஒன்றுசேர்ந்து ஒரே நோக்குடன் சூழ்ச்சி செய்ததாகவும் அந்தச் சூழ்ச்சியின்படி அவர் கொலை செய்யப்பட்டதாகவும் 68ம் ஆண்டு நவம்பர் 2ம் தேதி ராமச்சந்திரன் என்பவர் முகமது சுல்தான் முஹிதீனை கொலை செய்ததாகவும் அதே நேரம் அதே இடத்தில் நடராசா 1ம் எதிரிக்கு உதவியாக இருந்து இக்கொலைக்குடந்தையாக இருந்தாரென்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரிசார்பில் அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினமும் 2ம் எதிரி சார்பில் அட்வகேட் வி தம்பித்துரையும் சாட்சியமளித்தவர்களை குறுக்கு விசாரணை செய்தார்கள். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் குமார் குலரசேகரா ஆஜரானார்.

கந்தசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்

(5ம் பக்கம் பார்க்க)

## ஒன்று சேர்க்க முயற்சி

மாவிட்டபுரம், புதன்
காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள 10க்கு மேற்பட்ட மீன்பிடிச்சங்கங்களை ஒன்றுபடுத்தி மீனவர்களின் பிரச்னைகளை ஒரேமுகமாகத் தீர்க்கும் வகையில் இச்சங்கங்களை ஒன்றுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பலாலி, மயிலிட்டி, வளலாய், மாதகல், திருவடிநிலை, சேந்தான்குளம் ஆகிய

(6-ம் பக்கம் பார்க்க)

நாகலிங்கம் ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு 10-30
ONE SPY TOO MANY

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எல்லாம் உனக்காக


REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Franco nero
in
TEX S ADDIOS
(Cinemas cope)

தினசரி பி. ப. 2-00, 9-45
திலீப்குமார்-வைஜயந்திமாலா
நடித்த
பாட்டாளியின் சபதம்

மனோகரா யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, & 9-30
சனி ஞாயிறு காலை 10-30
ஜேம்ஸ் பொண்ட் பாணியில் தயாரிக்கப்பட்ட
சங்கர்லால் பிக்சர்ஸ் அளிக்கும்
தீந்தமிழ்த் திரை ஓவியம்
பம்பாயில்
சீ. ஐ. டி. 555

ராணி (யாழ்ப்பாணம்) ரவிச்சந்திரன் - காஞ்சனா
நாகேஷ் - மனோகர் நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
நாலும் தெரிந்தவன்

3 வது ஜனத்திரள் வாரம்
வெலிங்டன் (யாழ் நகர்) லிடோ (யாழ். நகர்)
பி. ப. 2-30 மாலை 6-30 காலை 10-30, பி. ப. 2-00
இரவு 10-00 மணி. மாலை 6.00, இரவு 9-30
மற்றும்
கெப்பிட்டல்—பிளாஸா
திரைகளில்
நடிகர் திலகம்
சிவாஜி
கணேசன்
(3 வேடங்களில்)
ஜெயலலிதா



நாகேஷ்
நம்பியார்
சுந்தரராஜன்
நடித்த
சாந்தி பிலிம்ஸ்



தெய்வ மகன்
திரைக்கதை—டைரக்ஷன்
ஏ. ஸி. திருலோகசந்தர்

வின்சர் யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
★ ஜெமினி கணேசன்
☆ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ பி. எஸ். வீரப்பா ★ நிர்மலா
நடித்த
சங்கமம்

# தீவுப்பகுதி விளையாட்டுப் போட்டி நாளை நடக்கிறது

குருநகர், வியாழன்

தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கம் விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் நடாத்தும் 1971ம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் இறுதிப்போட்டி இம்மாதம் 3-ம் திகதி காலை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு பொ. நடராசா தலைமையில் நடைபெறும். இப்போட்டியில் மேலதிக அரசாங்க அதிபர் ஏ. ஏ. யோசப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வேலணை காந்திஜீ ச. ச. நிலையம், மகேஸ்வரி ச ச நிலையம், சரவணை திருவள்ளுவர் ச ச நிலையம்; புங்குடுதீவு இறுப்பிட்டி ச ச நிலையம், நசரேத் ச ச நிலையம் பாரதி ச ச நிலையம், கருவில் இளைஞர் விளையாட்டுக் கழகம், மருதியடைப்பு ச ச நிலையம் ஊர்காவற்றுறை 3 ஏஞ்சல் விளையாட்டுக் கழகம், சென் ஜேம்ஸ் ச ச நிலையம், புளியங்கூடல் மகாமாரி ச ச நிலையம் நயினாதீவு விஜயர் விளையாட்டுக்கழகம், எழுவைதீவு பத்திமா ச ச நிலையம் மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகம், வேலணை செட்டிபுலம் ச ச நிலையம், கரம்பன் விளையாட்டுக்கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன. உயரம் பாய்தல், மீற்றர் ஓட்டம், பரிதிவட்டம் எறிதல், அஞ்சல் ஓட்டம் கயிறு இழுத்தல் குண்டெறிதல், நீளம்பாய்தல், கரப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி, தத்திமிதித்துப் பாய்தல் ஆகிய விளையாட்டுகளின் இறுதிப் போட்டிகள் இடம் பெறுகின்றன. இவ்விறுதிப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கான கேடயங்களையும் பதக்கங்களையும் முறையே கருவில் த சண்முகலிங்கம் புங்குடுதீவு ம கதிரவேலு கரம்பன் இ மாணிக்கம் வேலணை எஸ் சிவகடாட்சம் யாழ்ப்பாணம் எஸ் எல் ஆன்ரன், யாழ்ப்பாணம் எஸ் குமாரசுவாமி யாழ்ப்பாணம் எம் பொன்னம்பலம் ஆகியோர் வழங்கியிருக்கின்றனர். பரிசில்களை திருமதி ஏ ஏ யோசேப் வழங்குவார்.

உதைபந்தாட்டம்

## பொம்பஸ் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில், கதிரி பொம்பஸ் கழகம், குருநகர் யுத்கவுன்ஸிலை வெற்றி பெற்றது.

இப்போட்டியில், இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் கோல்கள் எதையும் போடவில்லை, இடைவேளையின் பின் பொம்பஸ் கோஷ்டியினரின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இக் கோஷ்டியின் வீரர்களான ஏ. அருணகிரிராசாவும், வி மெய்யழகனும் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டனர். யுத்கவுன்ஸில் கோஷ்டியின் வீரர் ஏ. செபஸ்ரியன் ஒரு கோலை மட்டும் போட்டார். ஆட்ட இறுதியில், பொம்பஸ் கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

## ஜெகஜீவ் வெற்றி

யாழ்ப்பாணம், வியா புன்னாலைக்கட்டுவன் வடக்கு 'ஜெகஜீவ் கழகத்தினருக்கும், புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ஜெகஜீவ் கழகத்தினர் 5-1 கோல்களால் வெற்றியீட்டினர். திரு. ஆ. பத்மநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் 2—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

இரவு 6-15 ஓடிவிளையாடு பாப்பா, 6-30 இராமியப் பாடல்கள், 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 சித்திரம், 7-50 வாத்திய இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி. 10-30 செய்தித் தொகுப்பு.

## கடையில் திருட்டு

சங்கானை, புதன்

சங்கானைச் சந்தையிலுள்ள எஸ். ரி. இராசரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கடையில் கடந்த இரவு திருடர்கள் முன் கதவை உடைத்து உட்புகுந்து இரு தங்க மோதிரங்களையும் ரொக்கப் பணத்தையும் களவாடிச் சென்றுள்ளதாகச் சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. செனவிரத்ன விசாரணை நடத்தினார்.

வெஸ்லி சினிமா
காவிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
மனோகர் - பி. எஸ் சரோஜா
நடித்த
கண்ணக்கிளி

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
பெண்ணே நீ வாழ்க

வரிவிளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் ராதா மெசின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

துரித சலவைக்கு மிக்க வைற் சலவைப்பவுடர் பாவியுங்கள். பாவித்த வெற்றுறை ஒன்றை அனுப்பி எமது வெளியீட்டுப் புத்தகங்களில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்க வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 3520

விற்பனைக்கு

ராதா கைலாச முகப்பரு, வேனல் கட்டி, சொறி, சிரங்கு, கரப்பான், திப்பட்ட புண் முதலிய சரும நோய்களுக்கு சிறந்த மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3423

சோமசெற் EY 6380 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆ. நடராசா, தாவடி. 3537

ஓர் புதிய மின்சார துளை போடும் இயந்திரம் Wolf 3/4 இஞ்சி விற்பனைக்குண்டு. உடனே நேரில் தொடர்பு கொள்ளவும். பொ. செல்வராசா, மாதனை, பருத்தித்துறை. 3540

## 'பிரதமரும் மேலதிகநிலத்தை கொடுப்பார்'

வெல்லவாய, புதன்

"தனிப்பட்ட ஒவ்வொருவரும் எவ்வளவு நிலம் வைத்திருக்கவேண்டும் என அரசாங்கம் வரையறை செய்து சட்டம் கொண்டுவந்தவுடன் பிரதம மந்திரி கூட மேலதிகமாகவுள்ள நிலத்தைக் கொடுக்கத் தயாராகவிருக்கிறார்'

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டுறவு காங்கேசன் போலாவில் நடைபெற்ற இணைப்புச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"அரசாங்கம் தனிப்பட்ட ஒவ்வொருவரும் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும் என்று வரையறை செய்து சட்டம் கொண்டுவந்தபின்னர் எவரும் இதற்கு விதிவிலக்காக மாட்டார்கள்." என அமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சந்நிதி முருகன்

யாழ்ப்பாணம், வியாழன்

செல்வச் சந்நிதி முருகன் பற்றி முதலியார் குல சபாநாதன் எழுதிய சிறு நூல் இன்று இரவு 7 மணியளவில் செல்வச் சந்நிதி ஆலய வீதியில் வெளியிட்டு வைக்கப் படவிருக்கிறது.

விசாரணையின்போது மேலும் சில கடைகளை உடைப்பதற்கு எடுத்த முயற்சிகளும் தெரியவந்துள்ளன.

## ஜெனரல் டிக்காகானுக்கு என்ன நேர்ந்தது?

# கிழக்குப் பாகிஸ்தானில் 'சிவில்' கவர்னர் நியமனம்

## ராணுவ நிர்வாகியும் புதியவர்

புதுடில்லி, செப்டம்பர் 1

**கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க ஜெனரல் யாஹ்யாகான் முதல் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.**

கிழக்குப் பாகிஸ்தானில் சிவில் கவர்னர் ஒருவரையும், இராணுவ நிர்வாகி ஒருவரையும் யாஹ்யாகான் நியமித்துள்ளார். கிழக்குப் பாகிஸ்தானில் இராணுவ நிர்வாகியாக இருந்த ஜெனரல் டிக்காகான் என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

கிழக்குப் பாகிஸ்தானில் ஆறு மாதங்களுக்கு முன்னர் இராணுவம் நடவடிக்கையில் இறங்கியதிலிருந்து ஜெனரல் டிக்காகான் அங்கு கவர்னராகவும், இராணுவச் சட்ட நிர்வாகியாகவும் பொறுப்பேற்றிருந்தார்.

சமீப காலத்தில் ஜெனரல் டிக்காகானுக்கும் ஜெனரல் யாஹ்யாகானுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன.

இப்பொழுது ஜெனரல் டிக்காகான் என்ன ஆனார் என்றே தகவல் இல்லை.

கிழக்குப் பாகிஸ்தானில் விரைவில் சிவிலியன் ஆட்சிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று ஜெனரல் யாஹ்யாகான் சமீபத்தில் தெரிவித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இப்பொழுது சிவில் ஆட்சிக்கான ஏற்பாடுகளை அவர் எடுத்துவருகின்றார். இது ஒரு கண் துடைப்பு என்றும் சில வட்டாரங்களில் வர்ணிக்கப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் சிவில் கவர்னராக டாக்டர் ஏ. எம். மலிக் என்பவரை யாஹ்யாகான் நியமித்திருக்கிறார். இராணுவ நிர்வாகியாக லெப்டினன்ட் ஜெனரல் அமீம் அப்துல்லா நியாஸி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தான் ஆட்சி பற்றி இவர்கள் இருவரும் தம் விருப்பம்போல் தீர்மானங்கள் எடுக்க அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் அவை யாஹ்யாகானின் அனுமதி பெற்றாகவேண்டும்.

டாக்டர் மலிக் சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருப்பார். சட்டத்தையும் ஒழுங்கையும் இராணுவம் பார்த்துக்கொள்ளும்.

சிவில் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் மலிக் முன்னாள் மந்திரியாவார். கிழக்குப் பாகிஸ்தானியரான இவர் யாஹ்யாகானுக்கு ஆலோசகராகவும் இருந்துள்ளாராம்.

டாலர் நெருக்கடி

## அமெரிக்க நிபுணர்குழு பிரான்ஸ் செல்கிறது

நியூயோர்க், செப். 1

டாலர் நெருக்கடியில் எழுந்துள்ள நிலைமைகள் பற்றி ஆலோசனைகள் நடத்துவதற்காக அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் பிரான்ஸுக்குப் பொருளாதார நிபுணர்கள் குழுவொன்றை அனுப்பவிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் அல்லாத கைத்தொழில் நாடுகள் பலவற்றுக்கும் இம்மாதிரிக் குழுக்களை அனுப்ப திரு. நிக்ஸன் யோசிப்பதாகக் கூறப்படுகின்றது.

இதே சமயம் ஜப்பான் தனது 'யென்' நாணயத்தை மறு மதிப்பீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் சகல வெளிநாட்டுப் பொருட்களுக்கும் 10 சதவீதம் விசேஷ மேலதிக வரி விதிப்பதென்ற அமெரிக்காவின் திட்டம் காரணமாக ஜப்பான் பெரிதும் கிலேசமடைந்துள்ளது. அமெரிக்காவுக்கு ஏராளமான பொருட்கள் ஜப்பானிலிருந்து ஏற்றுமதியாகின்றன. இந்த வரியை விலக்கிக்கொள்ளும்படி ஜப்பான் விடுத்த கோரிக்கையை அமெரிக்கா புறக்கணித்துவிட்டது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பத்துச் சதவீத மேலதிக வரி விதிக்கும் யோசனை எவருக்கும் பாரபட்சம் காட்டும் நோக்கத்துடன் எடுக்கப்படவில்லை என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் கருத்து வெளியிட்டிருக்கிறார். ஜப்பானுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவே அமெரிக்கா விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

### நிக்ஸன் விஜயம்

அதிபர் நிக்ஸன் அடுத்த ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனாவுக்குச் செல்லவிருப்பது பற்றிக் குறிப்பிட்ட திரு. ரோஜர்ஸ் கம்யூனிஸ்ட் சீனாவுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வது ஜப்பான் தய்வான் போன்ற நாடுகளுடன் பகையை ஏற்படுத்திக் கொள்வதற்காக அல்ல. கம்யூனிஸ்ட் சீனாவுடன் உறவு ஏற்படுத்திக் கொள்வது போலவே இதர நாடுகளுடனும் உறவைப் பலப்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம் என்றார் அவர்

---

பருத்தித்துறை, வியா

உடும்பராய் இந்துக் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சர்வதேச நூல்நிலைய சேவை

லண்டன், செப். 1

அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு உதவி புரியக்கூடிய ஒரு சர்வதேச நூல்நிலையச் சேவை அளிப்பதற்கு பிரிட்டிஷ் நூல்நிலையத்தை கேந்திரஸ்தானமாகக் கொண்ட ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த உதவி பற்றி இப்பொழுது பிரிட்டிஷ் கலைவிவகார நூல்நிலைய அமைச்சர் லெலஸ் பிரபு அறிவித்துள்ளார். லிவர்பூலில் நூல்நிலைய சங்கங்களின் சர்வதேச சம்மேளனத்தின் 37வது மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட உதவிபற்றிக் குறிப்பிட்டார்.

உத்தேச சர்வதேச நூல்நிலையத்திற்கு, பிரிட்டிஷ் அரசாங்கம் 3 கோடியே 60 லட்சம் பவுணை ஒதுக்கியுள்ளது என்று லெலஸ் பிரபு கூறினார். 'பயனுள்ள நூல்களையும் நவீன நிலையங்களையும் கொண்டுள்ள நாடுகள், அவை இல்லாமல் அவதியுறும் அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு உதவி புரிவது கடமையாகும்' என்று அவர் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் மக்கள் பண உதவி?

வங்காள தேச விடுதலை வீரர்களுக்குப் பிரிட்டிஷ் மக்கள் நிதி உதவி வழங்கி வருவதாகப் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி இருப்பதாகத் தெரிகிறது.

வங்காள தேச விடுதலை இயக்கத்தினருக்கு ஹொங்கொங்கிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் பண உதவிகளும், ஆயுத உதவிகளும் கிடைத்து வருகின்றனவாம். பாகிஸ்தானை அழிக்கும் முயற்சி பிரிட்டனில் சில காலமாகவே நடைபெற்று வந்துள்ளதென்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள், டெலிவிஷன்கள், வானொலி முதலியவற்றில் பாகிஸ்தானுக்கு எதிராகப் பிரசாரம் நடைபெற்று வருவதாகவும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

தென்னாபிரிக்காவில்

## நிறபேதம் ஒழிகிறது?

கேப்டவுன், செப். 1

தென்னாபிரிக்காவில் உள்ள இரு பிரபல வங்கிகள் தனது ஊழியர்களுக்கு நிறபேதம் காட்டாமல் சம சம்பளமும் வசதிகளும் அளிப்பதற்கு முடிவுசெய்துள்ளன. வெள்ளையரான ஊழியருக்கு மட்டும் விசேஷ சலுகைகள் அளிப்பதை நிறுத்தி சம வேலைக்குச் சம சம்பளம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க இந்த வங்கிகள் முடிவுசெய்துள்ளன

'நாகா' மறைவு

## மல்லாகம் கி. ச அனுதாபம்

மாவிட்டபுரம், புதன்

காலஞ்சென்ற நல்லூர் முன்னாள் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மறைவுகுறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்றை மல்லாகம் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

மல்லாகம் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் சிவசிறீதரன் தலைமையில் நடைபெற்ற சமயம் தமிழரின் ஒப்புயர்வற்ற தலைவராகவும் தமிழ்மக்களுக்காக உயிரைத்தியாகம் செய்தவருமான நாகநாதனின் மறைவு ஈடுசெய்யமுடியாத நஷ்டம் என்று தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை அ. காசிப்பிள்ளை கொண்டுவந்தார். இப்பிரேரணையை சபை ஏகமனதாக ஏற்று அவரது குடும்பத்துக்கு அனுதாபத் தீர்மானம் அனுப்புவதெனவும் முடிவாகியது.

## மத்திய ஆசியாவில் இந்திய மொழி?

லெனின்கிராட், செப். 1

தாஜிகிஸ்தானிலுள்ள இஸ்ஸார் பள்ளத்தாக்கில் பயன்படுத்தப்பட்ட ஒரு இந்திய மொழியை லெனின்கிராடு பல்கலைக் கழக நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இஸ்ஸார் பள்ளத்தாக்கில் நிலவும் கிராமியக் கதைகளையும் சொல் வளத்தையும் ஆராய்ந்த போது, அங்கு ஒரு இந்தியமொழி பயன்படுத்தப்பட்டது, என்பதை அவர்கள் கண்டனர். ஹிந்துகுஷ் கணவாய் உள்பட பல் வேறு பாதைகளின் வழியாக இந்தமொழி சென்ற நூற்றாண்டில் மத்திய ஆசியாவுக்கு வந்திருக்கக்கூடும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

'பரியா' என்ற இனத்தவரை அவர்கள் ஆராய்ந்தனர். அந்த இனத்தினர் தாஜிக் மொழியையும், வடமேற்கு இந்திய மொழி ஒன்றையும் பேசுவதைக் கண்டனர். 'பரியா' என்ற இனத்தினர் 200 குடும்பங்களாக வாழுகின்றனர். அவர்களது விளையாட்டுக்கள், திருமணச் சடங்குகள் சம்பந்தமான நாட்டுப்புறப்பாடல்களையும், கதைகளையும், லெனின்கிராட் நிபுணர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களது ஆராய்ச்சி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

---

### நடை பஜனை

யாழ்ப்பாணம், வியாழன்

நாளை மாலை வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து பஜனைக் கோஷ்டியொன்று செல்வச்சந்நிதிக்குச் செல்கின்றது.

இப்பஜனை ஊர்வலத்திலே பல பண்ணிசைச்செல்வர்கள் பங்கு பற்றுகிறார்கள்.

ஆயுள்வேத திணைக்கள
அங்கீகாரமுள்ள
N.R. இன்டஸ்ரீஸ் தயாரிப்புகளான
சித்த மருந்துகள்
ஆயுள்வேத மருந்துகள்
எக்ஸ்ராக்ஸ் (EXTRACTS)
டிங்க்சேர்ஸ் (TINCTURES)
உள்ளூராட்சிமன்ற சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கும் வைத்தியர்களுக்கும் [illegible] கிடைக்கும்,
விற்பனையாளர்: சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# வடக்கின் சுகாதார அபிவிருத்தி திட்டங்கள்

## உதவி சுகாதார அமைச்சர் நேரில் ஆராய்ந்தார்

மானிப்பாய், புதன் வடக்கில் மேற்கொள்ளப் படவேண்டிய சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி உதவி சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா நேரில் ஆராய்ந்தார்.

உதவி அமைச்சர் வட பகுதிக்கு விஜயம் செய்தார். வடபகுதியில் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் குறித்தும் அவர் நேரில் கவனித்தார்.

தெல்லிப்பளையில் அமைக்கப்பட்டுவரும் அரசினர் வைத்தியசாலையை உதவி மந்திரி பார்வையிட்டார். காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பளைக்கு மாற்றப்படுவதற்காக தெல்லிப்பளையில் அமைக்கப்பட்டு வரும் வைத்தியசாலைக் கட்டடங்களை பார்வையிட்ட உதவி அமைச்சர் இவ் வைத்தியசாலை விரைவில் ஆரம்பிக்கப்படலாமென நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த உதவி அமைச்சரை வைத்தியசாலை ஊழியர்கள் வரவேற்றதை அடுத்து அங்குள்ள ஊழியரின் குறைகளைக் கேட்டறிந்து இதுபற்றி தாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையில் அமைக்கப்படும் கட்டடங்களையும் உதவி அமைச்சர் பார்வையிட்டார். அங்குள்ள ஊழியரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

### தெல்லிப்பளைக்கு பாராட்டு

"தெல்லிப்பளை, நாட்டின் சுகாதாரத்துறையை வளர்த்து மக்களை பலசாலிகளாக்கக்கூடிய பல திட்டங்களை எடுத்துக்காட்டும் முன்மாதிரியான கிராமமாக விளங்குகிறது"

இவ்வாறு தெல்லிப்பளை சுகாதார நிலையத்துக்கு விஜயம் செய்த உதவி அமைச்சர் திரு. சிவா ஒபயசேகரா அங்குள்ள புள்ளிவிபர அறிக்கைகளைப் பார்வையிட்டபின் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இங்குள்ள மக்களுக்கு இந்த நிலையம் செய்யும் சேவைகளை அறியக்கூடியதாக சுகாதார அறிக்கைகள் காட்டிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாண்டுநோய் வர்பேதை உட்பட மற்றும் வியாதிகளை தடுக்கவும் தாய் சேயரிபாலன முறையிலும் கர்ப்பிணிகள் சிகிச்சையிலும் இக் கிராமம் முன்னேறியுள்ளதை இவ்வறிக்கைகள் காட்டுகின்றன. நான் இதுவரை சென்ற மாவட்டங்களில் சுகாதாரவளமுள்ள கிராமமாக இக் கிராமத்தைத்தான் காணமுடிந்தது. இக்கிராமம் இவ்வளவு தூரம் வளர்ந்துள்ளதற்குக் காரணம் இந்தச் சுகாதார சேவையாற்றும் ஊழியர்களின் கடமையுணர்ச்சியும் நாட்டுக்கு உதவவேண்டும் என்ற மனப்பான்மையுமே யாகும். இதை நாட்டில் உள்ள மற்றும் சுகாதார ஊழியர்களும் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றார்.

------

### கலைவிழாவில் கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், வியா. சென்ற ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் சனசமூக நிலையத்தினரால் கலைவிழா ஒன்று கொண்டாடப்பட்டது. மானிப்பாய் பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கதிர் ஹாட்லி வெயர்ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. செ. தில்லைநாதன் கலந்துகொண்டார். பாலகிருஷ்ணன் குழுவினரின் நாதஸ்வர இசை, கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி, குருநாகல் ஸ்ராலெற் குழுவைச் சேர்ந்த பெண்களின் மேல்நாட்டு டின்னிசை, அகில இலங்கை இளம் இளைஞர் கழகத்தினரின் லேடி ரைப்பின் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நாதஸ்வர வித்துவான் பாலகிருஷ்ணனுக்கும் ஸ்ராலெற் குழுவினருக்கும் கலையரசு சொர்ணலிங்கம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

### கைப்பணிக்கு முக்கியத்துவம்

பருத்தித்துறை, புதன் எதிர்காலத்தில் கல்வித்துறையில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக கைப்பணிக் கல்விக்கு முக்கியத்துவம் ஏற்படவிருக்கிறது. எனவே ஆசிரியர் முக்கிய செய்முறைப் பாடங்களைக் கற்றுக் கற்பிக்கத் தயாராயிருக்கவேண்டும். பாடசாலைகளில் கைப்பணி, சங்கீதம், தோட்டம் ஆகிய பாடங்கள் குறைவாக மதிக்கப்பட்ட காலம் மலையேறி விட்டது",

இவ்வாறு கனிஷ்ட பாடசாலை ஆசிரியருக்கான கைப்பணிக் கழகத்தை கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைத்துப் பேசிய வடமாகாணக் கல்வியதிபதி திரு. டபிள்யூ டீ சி மகாதந்திலை குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் எந்தத் தொழிலும் குறைவான தல்லவென்றும் தனிப் புத்தகப்படிப்பு மட்டும் நாட்டுக்கு உதவாது என்பதை அரசாங்கமும் மக்களும் உணர்ந்துவிட்டனரென்றும் புதிய கல்வித்திட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் கலை, கைப்பணி வித்தியாதிகாரி திரு. மு. கனகசபை நன்றி கூறினார்.

### 'தபால்மா அதிபரை உடன் நியமிக்குக'

கோட்டை, புதன் காலந்தாழ்த்தாது தபால்மா அதிபரை நியமிக்க வேண்டும் என அஞ்சல் எழுதுவினைஞர் சங்கமும், தபால் எழுதுவினைஞர் சங்கமும் பொதுநிர்வாக அமைச்சரைக் கோரியுள்ளன.

பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- தபால்மா அதிபர் பதவிக்கான வெற்றிடம் நீண்டகாலமாக விருக்கிறது. அதனால் தபால் பகுதியின் நிர்வாகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

### போஷாக்கற்ற 30 லட்சம் சிறுவர்கள்

கோட்டை, புதன் இன்று பாடசாலை செல்லும் சிறுவர்களில் ஏறக்குறைய 30 லட்சம் பேர் போஷாக்குள்ள உணவின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

இலங்கை சயரோகத் தடுப்புச் சங்கத்தின் 13-வது வருடாந்த மகாநாட்டில் உரையாற்றிய டாக்டர் திரு ஜே. எச். எச். ஜயசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் மேற்படி 30 லட்சம்பேரில் சிகிச்சை பெறுபவர்களில் 40 வீதத்தினரைப் போஷாக்குப் பற்றாக்குறையில் இருந்து காப்பாற்றலாம் எனக் குறிப்பிட்டதோடு முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் தற்போது காசநோய் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டு ஏனைய நோய்களைத் தீர்ப்பதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

------

### சைவம் வளர...'

மாவிட்டபுரம் புதன் "சைவம் உயர்வடைய வேண்டுமானால் தினமும் ஆகக்குறைந்தது நாலு மணி நேரமாவது சைவசமயம்சம்பந்தமான நாடகம், கலந்துரையாடல் ஆகியன வானொலியில் ஒலிபரப்பப்படவேண்டும்"

இவ்வாறு அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபை, அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை ஆகியவற்றின் சார்பில் பிரம்ம ஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கூறியுள்ளார்.

### பொதுப் பணி

சுழிபுரம், புதன் "பொதுப்பணியில் ஈடுபடுவோர் பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஆயினும் எல்லோரினதும் அபிப்பிராயம் ஒரு கருத்தோடு இருக்கமுடியாது. அப்படி வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கும்போது ஒருவருக்கு உதவிசெய்வதை மற்றவர் மாறுகக் கணக்குப் போடவேண்டிவரும்."

இவ்வாறு முளாய்க் கூட்டுறவு வைத்தியசாலையின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சங்கத் தலைவர் திரு. வி. இராசசுந்தரம் குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

### ஆசிரியைகள் இடமாற்றம்

பருத்தித்துறை, புதன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விவசாய ஆசிரியை வேலணை மத்திய மகா வித்தியாலயத்திற்கும் உடுப்பிட்டி உயர்தர மகளிர் கல்லூரி விவசாய ஆசிரியை திருமதி எம். குமாரசாமி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 'தொழிற்சங்க வளர்ச்சிக்கு அங்கத்துவ பலம் அவசியம்"

உடுப்பிட்டி, புதன் தொழிற்சங்கத்தின் வளர்ச்சி அங்கத்தவ பலத்திலேயே தங்கியுள்ளது. சங்க அங்கத்தவர்கள் பலத்தைக் கண்டே சங்கங்களின் கருத்தை அரசாங்கம் கணிக்கிறது. இளைச் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்களை மிகவும் ஆர்வமாய்ச் சேர்த்துச் சங்கத்தை வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் நாற்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு இ. சுந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை தமது தலைமையுரையில் போது ஆசிரியர்கள் தொழிற்சங்க வளர்ச்சியை ஆராயப் புகுந்தால் வட இலங்கைத் தமிழாசிரியர்சங்கத்தின் வளர்ச்சிக்கும் இளைச் சங்கங்களின் நல்ல ஒத்துழைப்பும் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் தளராத ஒத்துழைப்புமே காரணமாகும். ஆசிரிய சங்க உத்தியோகத்தர்கள் தமது பதவிகளில் இருந்த காலத்துக்குக்காலம் மாறினால் மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் நமது ஆசிரியர் சங்கத்தின் வளர்ச்சி மேலும் உன்னதநிலை யடைவதற்கு ஓரளவு அனுபவமும் தொழிற்சங்க வளர்ச்சிக்குத் தம்மைத் தியாகம்செய்யக்கூடிய இளைஞர்களும் முன்வர வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணம் ஆசிரிய சங்கச் சந்தோசலிங்கம் திரு த இராசேந்திரனின் தமிழ்த்தாய் வணக்கத்துடன் ஆரம்பமான இவ் விழாவில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு க. இ. குமாரசாமி, கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய அதிபர் திரு வ. நடராசா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

காரியதரிசி திரு ஆ. க. மாணிக்கம் நன்றி கூறியதை அடுத்து புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

## மலாயாவில் சமயநிலை பற்றி பண்டிதை தங்கம்மா

யாழ்ப்பாணம், வியாழன் மலாயா வாழ் யாழ்ப்பாண மக்களிடம் சைவ சித்தாந்தத்தை வேணிக் காக்கவேண்டும் என்ற துடிப்பு பெரிதும் இருப்பதாகவும் நாவலர் பெருமானின் வாழ்வு சைவத்துக்கு அவர் ஆற்றிய தொண்டு என்பனவற்றை யாழ்ப்பாண பேச்சாளர்கள் மூலம் கேட்க ஆவல் படுகிறார்கள் என்றும் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தமக்கு குடும்பவிட்டி சன்மார்க்க சபை அளித்த தேநீர்விருந்துபசாரத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் மலாயாவில் குறிக்கப்பட்ட நேரத்துக்கு கூட்டங்கள் ஆரம்பித்தல் நிகழ்ச்சிகளை குறித்த குறித்த நேரத்தில் முடித்தல் போன்ற உயர்ந்த ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க முடிகிறதென்றும் கூறினார். சைவசித்தாந்தத்துக்கு முரண்பட்ட போக்குடையோர் மக்கள் வரவேற்பதற்கு அவர்கள் வடுத்தமும் தெரிவித்தார் எனவும் கூறினார்.

இவ் வைபவம் இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் நடந்தது. சபைசார்பாக சைவநூல் சபைத்தலைவர் திரு மு. சபாரத்தினம் வழங்கினார். மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் த. ஜெயரத்தினம், கவிஞர் செ கதிரேசபிள்ளை ஏ. ரி. பொன்னுத்துரை, வி. கந்தவனம் குறமகள், மங்களேஸ்வரி சின்னத்துரை பண்டிதர் முத்துக்குமாரு உட்பட பலர் வாழ்த்திப் பேசினார்கள். சுதாரவி நாகராஜன் சபையின் சார்பில் வாழ்த்துப் பாடினார், திரு க. செல்லையா நன்றி கூறினார்.

### "வெள்ளியில வணங்க லீவு வழங்குக"

மாவிட்டபுரம், புதன் "சைவருக்கு உள்ள ஒரு அரசாங்க ஊழியன் தனது சமயத்தின் புனித நாளான வெள்ளிக்கிழமையில் வழிபாட்டுக்கு ஆலயத்துக்கு செல்லமுடியாது உள்ளது. சைவ அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் ஆலயங்களுக்கு செல்ல இருமணித்தியாலம் லீவு தந்து உதவவேண்டும்."

இவ்வாறு அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபைத் தலைவர் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் பிரதமருக்கும் நிதி அமைச்சருக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளார்.

நல்லை

### இசைவிழா இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வியாழன் பிற்பகல் 5.30 மணி அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவர்கள் மிருதங்கம். மாலை 5.45 மணி செல்வி இராசவல்லி வல்லிபுரம் பாட்டு மாலை 6.15 மணி செல்வி ஞானகுமாரி தங்கராசா பாட்டு. இரவு 7 30 மணி செல்வன் எஸ் கதிரலிங்கம் பாட்டு. இரவு 9 00 மணி தொடக்கம் 10 மணி வரையும் திரு சபாபதி போல் பாட்டு.

பக்கவாத்தியங்கள்:- செல்வி மலர்தேவி பொன்னுத்துரை-வயலின், செல்வன் ஞா விஜயன்-மிருதங்கம், பிரம்மஸ்ரீ எஸ் சர்வேஸ்வரசர்மா-வயலின், செல்வன் எம் சிதம்பரநாதன்-மிருதங்கம், திரு க சித்திவிநாயகம்-வயலின், திரு ஏ எஸ் ராமநாதன்-மிருதங்கம் திரு இராதாகிருஷ்ணன் -வயலின், திரு ஐ சிவபாதம்-மிருதங்கம்.

### கிராம அபிவிருத்தி சங்கம்

சங்கானை, புதன் வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு நவரத்தினம் தலைமையில் சங்கானை கிராம சேவையினர் அலுவலகத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. அ. அழகசுந்தரம், உபதலைவர்: திரு சி சிவரத்தினம், ஏ மாணிக்கவாசகர், செயலாளர்: திரு. செ கனகரத்தினம், உப செயலாளர்: த விக்கினேஸ்வரன், பொருளாளர்: திரு. கே பேரம்பலம், நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# ‘ஆசிரியர்கள் உலகவிவகாரத்தை மாணவருடன் பேசவேண்டும்

## பெற்றோர் சமுதாய மாற்றத்தை உணர்ந்து செயற்படவேண்டும்’

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் சமீபத்தில் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் வட பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் உதவிப் பொறுப்பு அத்தியட்சகர் திரு இ. வாமதேவன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அவர் ஆற்றிய உரையின் சில பகுதி இங்கு கட்டுரை வடிவில் தரப்படுகிறது.



(இ, வாமதேவன் வடபிரதேச நில அளவைத் திணைக்கள உப அத்தியட்சகர்)

வகுப்பு அறையில் ஆசிரியர்கள் எம்மை சில சமயங்களில் கண்டிப்பதுண்டு. அவ்வேளையில் இளமைப் பராயம் உள்ள எமக்கு அது சில சமயங்களில் கோபத்தை உண்டு பண்ணுவது இயற்கை. ஆனால் அவர்கள் எங்களைச் சினந்து கொள்வதும், கண்டிப்பதும் எமது நன்மைக்காகவும் நாம் நல்வழியில் சென்று நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காகவே என்பதை. நாம் வளர்ந்து பெரியவர்களாகிய பின்பு தான் உணர்வோம்.

அண்மையில் நடந்த பயங்கரவாத இயக்கம் எமக்கு என்றென்றும் மறக்க முடியாத ஒரு சம்பவமாகும். இந்த இயக்கத்தை ஜனநாயக சோஷலிச முறையை விரும்பும் அரசாங்கமோ அல்லது மக்களோ ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அதை தலைதூக்கவும் விடமாட்டார்கள் இதன் விளைவு பெரிய பயங்கரமாகவும் அட்டூழியமாகவும் இருந்தது. நாம் அதை வெறுக்கின்ற போதிலும் இந்த இயக்கத்தில் ஒரு உண்மை எமக்கு அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது தற்போதைய சந்ததி முக்கியமாக இளம் ஆடவர்களும் பெண்களும் முன்பு போல்தமது பெற்றோர்களின் யோசனைகளை மூடத்தனமாகப் பின்பற்றுமல் தாமும் சமுதாயத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்றும் இளைஞர்கள் கருதிவிட்டனர். இந்தப் புதிய உணர்ச்சியையும் கண்விழிப்பையும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நன்றாக உணர்ந்து அந்தப் புது உணர்ச்சிக்கு ஏற்ற இந்த இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நல்ல வழிகாட்டவேண்டியது அத்தியாவசியமாகும். இந்த இயக்கம் நகரங்களை விட குறிப்பாக கிராமங்களில் தான் தாண்டவமாடியதென்பதற்கு காரணம் என்ன கிராமங்களில் பெற்றோர்கள் போதியளவு கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம்.

### பயங்கரவாத செயல்கள் வடக்கில் ஏன் இல்லை?

இந்த பயங்கரவாத இயக்கம் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டவில்லை யென்பதற்கு என்னகாரணம்? எமது இளைஞர்கள் கோழைகள் என்பதல்ல! அவர்களுடைய பண்பும் பகுத்தறிவும் மிகச் சிறந்து விளங்குவதே! அத்துடன் எமது யாழ்ப்பாணப் பெற்றோர்கள் ஓரளவிற்கு நல்ல பகுப்பும் உலக அறிவும் படைத்தவர்கள். ஆகவே அவர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல முறையில புத்திமதிகள் சொல்லி பண்படுத்தி வளர்க்கக்கூடிய வாய்ப்புள்ளவர்கள். ஆயினும் அவர்கள் உலக விவகாரங்களை பத்திரிகைகள் மூலம் புத்தகங்கள் மூலமும் படித்தறிந்து தமது பிள்ளைகளின் உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் அறிந்து பிள்ளைகளுடன் சமுதாய அடிப்படைகளையும் சுற்றுடல்களையும் வெகுதாராளமாகவும் பரிசுத்தமாகவும் கலந்துபேசி சிந்தித்து உரையாடினால் பிள்ளைகள் கண்டிப்பாக அவர்களின் பெற்றோரின் போதனைகளுக்குச் செவிசாய்க்காமல் போகமாட்டார்கள் அதேபோல வகுப்பறையில் கூட ஆசிரியர்கள் தமது மாணவர்களுடன் உலக விபரங்களை அவர்களுடன் கலந்துபேசி அவர்களுக்கு ஜனநாயக வாழ்க்கைக்கு ஏற்றபுத்திமதிகளைப் புகட்டவேண்டும்.

### அரசாங்க பதவிகளை எதிர்பாராதீர்

அரசாங்க உத்தியோகந் தான் எமக்கு வேண்டும் என்று மாணவர்களோ, பெற்றோர்களோ விரும்புவது சரியல்ல. கைத்தொழில் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபடவேண்டும்: குடியேற்ற நாட்டு நிர்வாகத்தின்கீழ் நாம் இருந்தபோது இலங்கையின் தென்பகுதியில் இருக்கும் மக்கள் அதாவது சிங்கள மக்கள் அரசாங்க உத்தியோகங்களை விரும்பவில்லை. காரணம் அவர்களுக்குப் போதிய பயிர்செய்யக்கூடிய செழிப்பான வளம் பொருந்திய இடங்கள் இருந்ததால் அவர்கள் கைத்தொழில் செய்து தமது சீவியத்திற்கு வேண்டிய பணம் தேடக்கூடியதாக இருந்தது இதன் காரணமாக அவர்களில் அநேகர் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கவோ அல்லது அரசாங்க சேவையில் பிள்ளைகளைச் சேர்க்கவோ விரும்பவுமில்லை அக்கறை கொள்ளவுமில்லை. துரதிஷ்ட வசமாக வடபகுதியைச் சேர்ந்த நாம் எமது காணிகள் செழிப்பற்று வறண்டு பயிர்ச் செய்கைக்கு மழையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த காரணத்தால் எமது பெற்றோர்கள் கஷ்டப்பட்டு பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பித்து அதன் மூலம் அரசாங்க சேவையில் பிள்ளைகளைப் புகுத்தி அவர்களின் வருவாயிலே தாமும் சீவிக்க வேண்டியிருந்தது: இந்த ஆங்கிலம் கற்ற அரசாங்க சேவையே தஞ்சம் என்றிருந்த காரணத்தினால் தான் மெதடிஸ்ட் மிஷன், கத்தோலிக்க மிஷன், ராமகிருஷ்ணமிஷன் ஆகிய மிஷன்கள் பள்ளிக்கூடங்களை யாழ்ப்பாணப் பகுதியிலே ஸ்தாபிக்க முக்கிய காரணமாக இருந்தது. இந்தமிஷன் பாடசாலைகள் நமக்கு ஊட்டியவைகள் மிகவும் திறமை வாய்ந்தது; பாராட்டக் கூடியது. இதன் காரணத்தால்தான் அநேக தமிழ் மக்கள் அரசாங்கத்தில் சில வருடங்களுக்குமுன்பு மிகப் பெரிய உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டிருந்தனர். ஏன் இப்போதுகூட சிறந்த பொறுப்புள்ள உத்தியோகங்களில் தமிழ் மக்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால் தற்போது சனத்தொகை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு போகும் காரணத்தால் பெரும்பான்மையான சிங்கள மக்களும் பிள்ளைகளைப் படிப்பித்து அரசாங்க சேவையில் ஈடுபடுத்த முன்வருவதால் எமது வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் அரசாங்க சேவையில்சேர கஷ்டமாக இருக்கின்றது. ஆகவே நாம் கால மாற்றத்திற்கு ஏற்ப அரசாங்க சேவையில் உள்ள ஆர்வத்தைக்குறைத்து தொழில்முறைக் கல்விகற்க முன்வரவேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் உளச்சார்புக்கேற்ப அவர்களை அவரவர்க்குத் தகுந்த சரியான தொழில் முறைகளில் கல்வியூட்டி அவர்களைத் தாமாகவே உழைத்து முன்வரக் கூடிய முறைகளில் கவனத்தைச் செலுத்த வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

### ஆங்கிலத்தின் அவசியம்

குடிநாட்டு நிர்வாகத்தின் கீழ் வாழ்ந்த பெற்றோர்கள் கண்டிப்பாக தற்போதைய நிலைமைக்கும் முந்திய நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து குடி நாட்டு அரசாங்கத்தைத் தான் விரும்புவார்கள்- ஆனால் காலம் மாறிக் கொண்டு போகும்போது நாமும் கட்டாயம் மாறத்தான் வேண்டும். முந்திய நாட்கள் போலல்லாமல் டாக்டர்களுக்கும் எஞ்ஜினியர் மாருக்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தருக்கும் கலியாண ஏலத்திலே (Matrimonial Auction) படிப்படியாக விலைகுறைந்து சமக்காரனுக்கும் விவசாயிகளுக்கும் கைத்தொழில் முதலாளிகளுக்கும் கலியாண ஏலத்தில் விலை கூடிக் கொண்டு போவது பாராட்டத் தக்கது. காரணம் எமது இளைஞர்கள் தாங்கள் கற்ற ரசாயன வைதீக முறைகளைக்கொண்டு திறமையான முறைகளில் தமது கமத்தொழில் விவசாயம் கைத்தொழில்களைச் செய்து நல்ல ஊதியத்தை எடுக்கக்கூடிய தன்மையே இதற்குக்காரணமாகும்-

ஆங்கிலம் எமது மாணவர்களுக்கு அத்தியாவசியமானது இதன் முக்கியத்துவத்தை அரசாங்கமே உணர்ந்து பாடசாலைகளில் இப்பாடத்தை ஒரு கட்டாய பாடமாக்க எண்ணி அமுலுக்கு கொண்டுவர இருக்கின்றது. நாமெமதுபிள்ளைகளுக்கு கண்டிப்பாக ஆங்கிலத்தைப் புகட்ட வேண்டும் ஆங்கிலம் சர்வதேச மொழியானதாலும் விஞ்ஞானம் ரசாயனம் மருத்துவம் ஆகியவற்றின் புத்தகங்களும் அவற்றின் புது முறைகளும் ஆங்கிலத்திலேயே அச்சிட்டு வெளிவருவதாலும் நாம் கட்டாயம் எமது அறிவை வளர்க்க ஆங்கிலத்தைப் படிக்கவேண்டும். இந்த நேரத்திலே நான் பாடசாலையில் ஆங்கிலம் படிக்கும் போது நடந்த இரு சம்பவங்களை இங்கு உங்களுக்குச்சொல்ல விரும்புகின்றேன். நாம் படிக்கும் காலத்தில்கூட எழுதும் போது சரியாக Grammatrical) இலக்கணமாகஎழுதப் பழகினாலும் பேசும்போது உச்சரிப்பு பிழையாகவும் தமிழும் கலந்துதான் பேசிவந்தோம். ஒருநாள் ஆறாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது ஆங்கில வாத்தியார் ஒரு மாணவரைப் பார்த்து Spell எடா Bull என்றார். மாணவர் Bull என்று சொன்னார். அதன் கருத்து என்ன வென்று கேட்கும் போது Cow'sHusband Sir' என்றார். வாத்தியார் சரியென்று சொல்லிவிட்டு மற்ற மாணவரைப் பார்த்து Spell எடா Cock என்றார் மாணவர் சரியாகவே எழுத்துக்கூட்டவே அதன் கருத்து என்னடா என்றார். மாணவர் Hen'sHusland Sir" என்றார். சரியென்று சொன்னவாத்தியார் மூன்றும் மாணவரைப் பார்த்து (நானென்று வைத்துக்கொள்ளுங்கள்) Spell எடா Dog என்றார் 'D.O.G. Sir என்றதும் கருத்தை விருவவே அவன் 'Son of Bitch Sir' என்றான். நாங்கள் எல்லோரும் சிரித்தோம். இவ்விதம் ஆங்கிலம் அன்று முதல் ஒரு முக்கிய மொழியாகவே இருந்துவருகிறது. ஆங்கிலத்தை மாணவர் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவேண்டியது மிக மிக அவசியம்.

## மகஜன சம்பத சுவீப்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1-ம் பக்கத் தொடர்ச்சி | | 06P000922 | 29P000359 | 27 T 000461 | |
| 03J000215 | 13J000389 | 18P000765 | 12P000991 | 07U000194 | 02U000574 |
| 21J000905 | 25J000917 | 08Q000138 | 06Q000999 | 06U000365 | 15U000382 |
| 20J000469 | 16J000555 | 07Q000410 | 02Q000045 | 22U000503 | 27U000049 |
| 02K000325 | 02K000613 | 09Q000693 | 23Q000443 | 21U000772 | 32U000194 |
| 19K000753 | 14K000002 | 17Q000087 | 26Q000575 | 07V000926 | 07V000965 |
| 21K000591 | 18K000871 | 13Q000249 | 11Q000843 | 11V000229 | 09V000402 |
| 03L000373 | 08L000889 | 09R000213 | 10R000142 | 25V000590 | 23V000209 |
| 06L000783 | 05L000678 | 07R000480 | 22R000912 | 18V000344 | 19V000727 |
| 09L000374 | 25L000289 | 21R000985 | 21R000789 | 21 V 000463 | |
| 18M000262 | 21M000193 | 23R000403 | 14R000350 | 08X000640 | 02X000201 |
| 30M000534 | 32M000062 | 18 R 000038 | | 18X000570 | 28X000492 |
| 30M000255 | 11M000522 | 08S000024 | 03S000357 | 16X000114 | 19X000833 |
| 03M000122 | 09M000553 | 01S000516 | 03S000296 | 27X000770 | 13X000856 |
| 09N000301 | 07N000516 | 04S000343 | 02S000523 | 01Y000988 | 05Y000463 |
| 17N000515 | 24N000126 | 28S000976 | 24S000864 | 18Y000820 | 16Y000831 |
| 13N000636 | 27N000028 | 28S000694 | 20S000151 | 32Y000274 | 13Y000567 |
| 13N000679 | 18N000905 | 15 S 000912 | | 24Y000968 | 30Y000228 |
| 08O000029 | 03O000023 | 08T000095 | 03T000027 | 10Z000793 | 04Z000760 |
| 24O000319 | 18O000392 | 03T000636 | 03T000622 | 10Z000047 | 08Z000732 |
| 22O000712 | 17O000192 | 06T000063 | 23T000554 | 07 Z 000190 | 25 Z 000096 |
| 18O000559 | | 15T000833 | 17T000197 | | |
| 09P000284 | 07P000888 | | | | |

## மேல்மாடியில்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

தவர் நகைக்கடை முதலாளி அந்தக்கடைக்கு மேல்மாடி கீழ்மாடி உண்டு. கீழ்மாடியில் கண் ஆடியில் நகைகள் வைக்கப்பட்டிருந்தன. முதலாளி கடையில் தனியாகத் தான் படுப்பார். நன் காலை 9 மணிக்குப் போய் மாலை 5 மணிக்கு திரும்பி விடுவேன் முதலாளி எங்கு படுப்பது என்று எனக்குத் தெரியாது.

1-ம் எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ஆர். தம்பிராஜிநம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ 1-ம் எதிரியைத் தெரியுமா? ஆம் பெயர் ராமச்சந்திரன் கடைக்கு வாறவர்

வழ அடிக்கடி வருவாரா? அடிக்கடி வருவதில்லை நகை வாங்க வாறவர்.

வழ! தகப்பனாரை தெரியுமா? அவரும் கடைக்கு வாறவர்.

வழ 3-ம் திகதி வழக்கம் போல காலை 9 மணிக்கு கடைக்குப் போனீர்? ஆம்

வழ கடைக்கு வெளியில் நின்று பார்த்தீரா? இல்லை

வழ இறந்தவரின் பிணத்தை கண்டீரா? மனையும் கருமனையும் பார்த்தேன்

இன்ஸ்பெக்டர் எச் பி ஜெயசூரியா சாட்சியமளிக்கையில், நகைக் கடை முதலாளியின் சடலம் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும். ஒரு சாரமும் அங்கு கிடந்ததாகவும் கூறினர்

சிறைச்சாலையைச் சேர்ந்த கே கே கனநாதன், மாஜிஸ்திரேட் கே விக்னராசா ஆகியோரும் சாட்சியமளித்தனர் விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது

## மணிவாக்கு

பயபக்தி இல்லாத அறிவு அறிவாகாது. அது மூளை அபிவிருத்தியாயிருக்கலாம் அல்லது கைத்தொழில் அபிவிருத்தியாயிருக்கலாம். ஆனால் ஆன்ம அபிவிருத்தியாக மட்டும் இருக்காது.

... கார்லைல்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் ஆவணிமாதம் 17-ந் திகதி (2-9-71)


## சேவைக்கு ஒரு சங்கம்

நமது நாட்டில் முப்பது லட்சம் பாடசாலைப் பிள்ளைகள் போஷாக்கின்மை காரணமாக க்ஷயரோகம் முதலிய பல்வேறு நோய்களுக்குப் பலியாகக்கூடிய நிலையில் இருக்கிறார்களென்றும் இந்நோய்களில் நாற்பது சத வீதம் சாதாரணமாகத் தடுக்கக்கூடியவையென்றும் இலங்கைக் க்ஷயரோகத் தடுப்பு தாய்ச் சங்கத் தலைவர் டாக்டர் ஜே. எச். எப். ஜயசூரியா கூறியிருக்கிறார். க்ஷயரோகத் தடுப்புச் சங்கப் பாணந்துறைக் கிளையின் பதின்மூன்றாவது ஆண்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார். பல பிரச்சினைகளால் நலியும் நமது நாடு தனது வருங்காலத்தைப் பெருமளவில் பாதிக்கக்கூடிய இந்த அவலநிலையை அகற்ற வழிதேட வேண்டியது அவசியம்.

போஷணைக் குறைவு விசேஷமாக ஆசிய நாடுகளைப் பீடித்திருக்கும் பெருநோயென்று உலக சுகாதார நிபுணர் குழு தனது அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கின்றது. இக்குறையை நிவர்த்திசெய்வதற்கு இந்திய நாடு பல திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருகின்றது. புரதச்சத்து நிறைந்த உணவுப் பொருள்களைப் பெருமளவில் உற்பத்திசெய்வது இத்திட்டங்களின் முக்கிய அம்சமாகும். நமது நாடும் விவசாயத்திலும் உணவு உற்பத்தியிலும் மேற்கொள்ளும் திட்டங்கள் இந்தக் குறையை நிவர்த்திசெய்ய உதவ வேண்டும். புரதச்சத்துக் குறைவை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி திட்டமிட்ட முறையில் புரதச்சத்துள்ள உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய அரசாங்கமும் மற்றையோரும் முன்வர வேண்டும்.

க்ஷயரோகம் ஒரு கரிய நோய் என்றும், அந்நோயால் பிடிக்கப்பட்டவர் தனது இறுதியை நோக்குவதைத் தவிர தப்பும்வழி வேறெதுவுமில்லை என்பது கடந்தகாலக்கருத்து. அந்தக்காலத்தில் க்ஷயரோகி மட்டுமல்லாது அவரது குடும்பமே சமூகத்தால் ஒதுக்கப்பட்டு வந்தது. இன்று இந்த நிலைமாறி இந்தக் கொடிய நோயை இலேசாகத் தடுக்கும்முறையும் குணமாக்கும் சிகிச்சைமுறையும், மருத்துவ முன்னேற்றத்தால் நாடெங்கும் கையாளப்பட்டுவருகிறது. இதன் விளைவால் இந்நோய் ஒரு சாதாரண நோயாகவும் பலர் அதன்பிடியில் இருந்து தப்பிக்கொள்ளவும் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பூரண சுகமடைந்து புனர்வாழ்வு வாழவும் முடிகின்றது.

இத்துறையில் அரிய சேவையை ஆற்றுகின்ற இலங்கை தேசிய க்ஷயரோகநிவாரணசங்கத்தை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இச்சங்கம் ஆசியாவிலேயே மிகவும் பழமையான சங்கங்களில் ஒன்றென்றும் அவுஸ்திரேலியா தன்னும் இவ்விதசங்கமொன்றைத் தேசியரீதியில் உருவாக்கியது இலங்கைக்குப் பின்புதான் என்றும் சுகாதாரச்சேவை அதிபர் பேராசிரியர் ராஜசூரிய பாணந்துறை மகாநாட்டில் கூறியிருக்கின்றார். இம் மகாநாட்டில் 58 கிளைச்சங்கங்கள் சமுகமளித்தன. க்ஷயரோக நிவாரணசேவை எவ்வளவு விருத்தியடைந்து வருகின்றதென்பதற்கு இது தக்க சான்றாகும்.

க்ஷயரோக நிவாரண சங்கத்தைப் பொறுத்தளவில் அது தனது சேவையைப் பரவலாக்கி க்ஷயரோகம் மட்டுமல்ல போஷணைக் குறைவால் விளையும் பல்வேறு வருத்தங்களைத் தடுக்கவும், தகுந்த சிகிச்சையளிக்கவும் உதவக்கூடிய புதிய சுகாதாரக் கல்விநிலையம் ஒன்றை கொழும்பில் அமைக்க ஏற்பாடு செய்கின்றது. இந்நிலையம் பிரசாரத்துக்கே முக்கியத்துவம் அளிக்கும். நோய்வந்தபின் சிகிச்சையளிப்பதிலும் பார்க்க அதைத் தடுப்பதே சிறந்தது என்ற கருத்துக்கிணங்க இக்கல்விநிலையம் அமையவேண்டுமென்று டாக்டர் ஜயசூரியா கிளைச்சங்கப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்திருக்கிறார். நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்வுக்கு அடிகோல அரசாங்கமும் சுகாதார அமைச்சும் மட்டுமல்ல க்ஷயரோக சேவை வைத்தியசேவை பொதுமக்கள் ஆதரவு எல்லாம் ஒருமுகமாய்ச் செயலாற்றுவதே சிறந்தமுறை.

உலகிலே 81 நாடுகளில் இவ்வித தேசியசங்கங்கள் தன்னலமற்ற சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. விருத்தியடைந்த நாடுகளில் க்ஷயரோகம் முதலிய கொடிய வியாதிகள் நல்ல முறையில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. பொதுமக்கள் போதிய அறிவும் ஆர்வமுமுடையவர்களாயும் பொறுப்புணர்ச்சிமிக்கவர்களாயும் காணப்படுகின்றனர். க்ஷயரோகத்தை முற்றாகக் கட்டுப்படுத்தி அதனிலும் கொடிய வியாதிகளை எதிர்த்துப் போராடும் பணியில் அச்சங்கங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அந்த நாடுகளுக்குப் பொதுவான அனுபவம் ஒன்றுண்டு. அது எந்தக் குபேர நாடாகவிருந்தாலும் சரி வல்லரசாகவிருந்தாலும் சரி இவ்வித கொடிய நோய்கள் பரவாமல் தடுக்கத் தொண்டர் சபைகளே இன்றியமையாதவை. தனி மனிதனோ அல்லது மனிதர் கூட்டமோ க்ஷயரோகம் முதலிய கொடுமைகளுக்கு அடிமைப்பட்டால் அவர்களின் அறியாமையே முக்கிய காரணம் என்ற உண்மையும் தெளிவாகின்றது.

எமது நாட்டைப்பொறுத்தளவில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்தொன்றுண்டு. நமது நாட்டில் கூட்டுறவு வாழ்க்கை ஓரளவிற்கு விருத்தியடைந்த போதிலும் எந்தப் பிரச்சினையையும் "தான் தப்பினால் தப்ப"வென்ற மனப்பான்மையுடன் அணுகும் வழக்கம் மக்களுக்கிடையே இன்றும் உலாவுகின்றது. ஆகவே 23 ஆண்டுகளாக அரியசேவையை ஆற்றிய இலங்கைத்தேசிய க்ஷயரோக நிவாரணசங்கத்தின் பெருமை சிறந்த பாராட்டுக்குரியது. கடந்த காலத்தில் முன்னேற்றம் கண்ட இச்சங்கத்தின் வருங்காலம் மிகப் பொறுப்பு வாய்ந்த நிலையில் இருக்கின்றது. 30 இலட்சம் மாணவர்களின் வளர்ச்சி, விருத்தி, தேசத்தின் வளம் சங்கத்தின் பலத்திலே பெருமளவில் தங்கியுள்ளது. அந்தப் பலம் முறையே மக்களின் ஒத்துழைப்பாலும் விழிப்புணர்ச்சியாலும்தான் வளரும். சங்கத்தின் மகத்தான சேவை பன்மடங்கு பெருக மக்கள் ஆதரவளிப்பார்களென்று நம்பலாம்.

# அரசாங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும்

**- கே. பி. ஹரன் -**

'மாஸ்கோவில் 'குசுகுசு' பேச்சுகள் இல்லை, விலகும் வதந்திக்கு மறுப்பு' என்ற தலைப்புடனே 'டெயிலி நியூஸ்' பத்திரிகை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ)யைப் பற்றி ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

சோவியத் யூனியனில் இப்பொழுது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ)யைச் சேர்ந்த சில முக்கிய தலைவர்கள் ரகசிய கூட்டம் நடத்துகிறார்களா? அக்கட்சி இலங்கை அரசாங்கத்திலிருந்து விலகக்கூடுமா? என்பது பற்றி பல பல வதந்திகள் கிளம்பியுள்ளனவாகவும் ஆனால் இந்த வதந்திகளில் ஆதாரமெதுவுமில்லை என்றும் இங்குள்ள அக்கட்சித் தலைவர்கள் மறுத்துள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பொதுக்காரியதரிசி பீட்டர் கெனமன், டிபுடி பொதுக்காரியதரிசி கே. பி. சில்வா, மத்திய கமிட்டி மெம்பர் வி. பொன்னம்பலம், எம்.பிக்களான சரத் முத்தெட்டுவேகம, திஸ்ஸ பலல்லா இவர்கள் ரஷ்யாவுக்கு இச்சமயம் சென்றுள்ளதன் நோக்கமென்ன? அரசியலா அல்லது சொந்தக் காரணங்களா?

சொந்தக் காரணங்களுக்காகவே அவர்கள் அங்கு தனித்தனியே சென்றிருப்பதாகவும், இரு எம். பி.மார்களும் சில நாடுகளுக்குச்சென்றுள்ளனரேயன்றி ரஷ்யாவுக்கு அல்லவென்றும், மற்றவர்கள் வைத்திய சோதனைக்கும் ஓய்வுக்குமே சென்றிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சில சுயநல விஷமிகளே வீண் வதந்திகளைக் கிளப்பிவிட்டிருப்பதாகவும், அரசாங்கத்திலிருந்து தங்கள் கட்சி விலகப்போவதில்லை என்றும் இதற்குமாறாக வாடகைச் சட்டம், நிலங்கள் டிரஸ்ட் சட்டம் இவற்றை வீடமைப்பு அமைச்சர் சீக்கிரத்தில் கொண்டுவரவிருப்பதாகவும் கூறுவதாக அச்செய்தி தெரிவிக்கிறது.

அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஒரு கட்சியின் முக்கிய தலைவர்கள் ரஷ்யாவுக்கு இச்சமயம் சென்றுள்ளதற்கு வைத்திய சிகிச்சையே காரணமென்பது உண்மையாக இருந்தாலும் கூட அதை பிறர் அப்படியே நம்புவது கடினம். இவ்வளவு தலைவர்களுக்கு ஏககாலத்தில் உடல் நலமில்லாது போனதேன்? அப்படி இருப்பினும் இலங்கையிலேயே சிகிச்சைசெய்து கொள்ளமுடியாதா. இவ்வளவு பேரும் வெளிநாடுகளுக்குச் செல்ல யார் டிக்கெட் அனுப்பியது? அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணியை இவர்களுக்கு அனுமதித்ததா? என்ற பல பல கேள்விகள் எழுகின்றன.

o o o

சோவியத் ரஷ்யாவுடன் இந்தியா 20 வருட ஒத்துழைப்பு, நட்பு ஒப்பந்தம் செய்துகொண்டதை வரவேற்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) ஓர் அறிக்கை வெளியிட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் பற்றி இலங்கை அரசாங்கம் இதுவரை தன் கருத்தை வெளியிடவுமில்லை கருத்தை வெளியிடவேண்டுமென்ற அவசியமுமில்லைத்தான். என்றாலும் ரஷ்ய-இந்திய ஒப்பந்தம் காரணமாக கூட்டுச்சேரா நாடுகளுக்கிடையே ஒரு தர்மசங்கடமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம், கூட்டுச்சேராக்கொள்கையைப் பாதிக்கவில்லை என்று பாரதப் பிரதமர் இந்திராகாந்தி கூறினாலும், இந்தியா ரஷ்ய வல்லரசு பக்கம் சாய்ந்துள்ளதென்பதை மறுப்பதற்கில்லை. சீனாவுடனும் இதேமாதிரி ஒப்பந்தம் செய்துகொள்ள இந்தியா முயற்சிக்கிறதென்றாலும் புதுசீனம் இதற்கும் பதில்கூட அளிக்கவில்லை. தன் நன்மைக்காக இந்தியா இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருப்பினும், அந்த வழியை இலங்கையும் பின்பற்றத் தயங்குவதாயின் அதற்கு நியாயமுண்டு.

இது எப்படியாயினும், ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி விலகவேண்டியதற்கு இச்சமயம் அவசியமெதுவுமில்லை. கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ)யின் கொள்கைகள் கருத்துக்கள் என்னவாயிலும், அவை அனைத்தும் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது. பொதுவான ஒரு திட்டத்தின் மீதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி(மாஸ்கோ) இவை தேர்தல் ஒப்பந்தம் செய்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றன. அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எவ்வித தடையும் ஏற்படவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து அரசாங்கத்தில் இருந்து வரவேண்டுமென்பதே தேர்தல் கூட்டு முன்னணியை ஆதரித்த வாக்காளரின் கருத்தாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிமட்டுமல்ல இடதுசாரிகள் அனைவரையும் அரசாங்கத்திலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று ஒரு சாரார் முயற்சிப்பது பகிரங்க ரகசியம். ஆனால் அந்த முயற்சி இதுவரை பலிக்கவில்லை. சோஷலிஸ நோக்கம் கொண்ட பிரதமர் ஸ்ரீமா இதற்கு இடம் கொடுக்க மாட்டாரென்றும் கம்யூனிஸ்ட் கட்சி இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து இருந்து வரும் என்றும் நம்பப்படுகிறது.

## ஒன்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் உள்ள மீன்பிடிச் சங்கங்களை இணைத்து ஒரே சமாசத்தின் கீழ் இயங்கச் செய்ய தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சங்கங்களை ஒன்றுபடுத்தும் முயற்சிகளை மயிலிட்டி சென் மேரிஸ் மீன்பிடிச் சங்கத் தலைவர் திரு. ச. லோறன்ஸ், மயிலிட்டி ஆனந்தா கடற்றொழில் சங்கச் செயலாளர் திரு. க. சிவகுருநாதனும் ஈடுபட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

**ஜே. எஸ். செல்வநாதர்**

கொழும்புத்துறை, [illegible] ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளரும் இரத்தினமலரின் அன்புக் கணவரும், பற்றீஷியா, வசந்தி, மத்தியூஸ் ஆகியோரின் தந்தையும் வல்வெட்டித்துறை சூசைமுத்து தம்பதிகளின் மைந்தனும் மாதகல் செல்லமாணிக்கத்தின் மருமகனும் பீற்றர், அழகன், தேவராசா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனுமான திரு. ஜே. எஸ். செல்வநாதர் காலமானார். ஈமச்சடங்குகள் 4-9-71 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதகலில் நடைபெறும்.

8003

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' கம்பனியாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.